**சுருக்கம்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – அனைத்து மாவட்டங்களிலும் இயங்கும் சத்துணவு மையங்களில், 1982–1983 முதல் 2014–2015–ஆம் ஆண்டு வரையிலான நிலுவையிலுள்ள தணிக்கைத் தடைகளை (ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை மற்றும் நீதிமன்ற வழக்கு தொடர்பான பத்திகள் நீங்கலாக) தள்ளுபடி செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–3) துறை**

அரசாணை (2ப) எண்.03

நாள் 10.03.2025<br>
திருவள்ளுவர் ஆண்டு 2056<br>
குரோதி, மாசி 26

படிக்க:-

சமூக நல ஆணையரின் கடிதம் ந.க.எண். 009810/சஉதி-3/2024, நாள் 03.10.2024 மற்றும் 27.12.2024.

------

ஆணை :-

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், நிலுவையிலுள்ள தணிக்கைத் தடைகளை உடனடியாக தீர்வு செய்யவும், அத்தணிக்கைத் தடைகளின் மீது காலம் தாழ்த்தாமல் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுவது தொடர்பாகவும், தலைமைத் தணிக்கை இயக்குநர் (மு.கூ.பொ) அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சத்துணவு மையங்களின் முறைகேடுகள், குறைபாடுகள்/தணிக்கைத் தடைகள் மீது நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும், அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் அரசாணைகள் மற்றும் அறிவுரைகள் சரியாகப் பின்பற்றப்படுகிறதா என நிர்வாகத்தால் கண்காணிக்கப்பட வேண்டும் என்றும், களவு/இருப்பில் குறைவு போன்ற குறைபாடுகள் அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு, இவை மீண்டும் நிகழா வண்ணம் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், நிலுவைத் தடைகளின் மீது தனிக்கவனம் செலுத்தி முழுமையாக தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்ய வேண்டி காணொலி கூட்டங்கள் வாயிலாகவும், மாதாந்திர கூட்டங்கள், கடிதங்கள், மின் அஞ்சல் மற்றும் வாட்ஸ்-அப் மூலமாகவும் அறிவுறுத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்க அனைத்து மாவட்டங்களையும் கேட்டுக் கொள்ளப்பட்டதாக சமூக நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

த.பி.பா.

2. மேலும், 1982–1983 முதல் 2014–2015–ஆம் ஆண்டு வரை உள்ள காலத்திற்கு, சத்துணவு மையங்களில் நிலுவையிலுள்ள தணிக்கைத் தடைகளை நீக்கிட இதுநாள்வரை நடவடிக்கை எடுக்க இயலாத நிலை குறித்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் நேர்முக உதவியாளர்களிடமிருந்து (சத்துணவு) பெறப்பட்ட அறிக்கைகளில் பின்வரும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்று சமூக நல ஆணையர் தெரிவித்துள்ளார்:–

i. காலங்கடந்த நிலைப்பாட்டில் பெரும்பாலான வட்டாரங்களில் நிலுவையிலுள்ள தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்ய உரிய ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை.

ii. தலைமைத் தணிக்கையாளரால் சுட்டிக்காட்டப்பட்ட, தணிக்கைத் தடை நிலுவையிலுள்ள சத்துணவு மையங்களில், அக்காலங்களில் அமைப்பாளராக பணிபுரிந்தோர் யாரும் தற்போது பணியில் இல்லை. பெரும்பாலோர் ஓய்வு பெற்று விட்டனர். மேலும் சிலர் வேறு பணி கிடைத்த நிலையில், தன்னிச்சையாக பணியிலிருந்து விலகிவிட்டனர். இவற்றில் ஒரு சிலர் காலமாகி விட்டனர். இது போன்ற பல்வேறு காரணங்களால், தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்ய உரிய ஆவணங்களை தணிக்கையாளர்களுக்கு தாக்கல் செய்ய முடியாத நிலையே தொடர்ந்து நிலவி வருவதால், தடைகளை நீக்க இயலாத நிலை தொடர்கிறது.

iii. சத்துணவுத் திட்ட செயல்பாடுகள் 2005–2006 வரை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலர்கள் வசம் இருந்த நிலையில், சத்துணவுத் திட்ட தணிக்கைகள் 2006 முதல் மட்டுமே சமூக நலத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

iv. 2005–ஆம் ஆண்டுக்கு முன்பு, சத்துணவு அமைப்பாளராகப் பணியிலிருந்த நபர்கள், அவர்கள் மேற்கொண்ட சத்துணவு அமைப்பாளர் பணி, பகுதி நேரப்பணி என்பதுடன், ஓய்வூதியப் பயன்கள் இல்லை என்பதைக் கருதி, வேறு முழுநேரப் பணிக்கு செல்வதில் முனைப்பாக செயல்பட்டனரே அன்றி, அவர்கள் பணிபுரிந்த மையத்தில் ஆவணங்களைப் பராமரிக்க தவறிவிட்டனர். சிலர் பணியிலிருந்து எவ்வித முன்னறிவிப்புமின்றி விலகிச் சென்றனர் (Stayed away from duty without any Intimation) என்பதும் ஆவணங்கள் தணிக்கைக்கு கிடைக்காத நிலைக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது.

v. மேலும், சத்துணவு மையங்களில் நிலுவையாக உள்ள தணிக்கைப் பத்திகளில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் பள்ளி மாணவர்களின் மதிய உணவு திட்டத்தின்கீழ் மாணவர்கள் உணவு உட்கொண்டதற்கான செலவினமேயன்றி, வேறு எதுவும் இல்லை. உண்மையில் சத்துணவுத் திட்ட செயல்பாட்டிற்கான தணிக்கையில் குறிப்பிடப்படும் தொகைகள், மாணவர்களுக்கு உணவளிக்க மேற்கொண்ட செலவினம் என்பதை உறுதி செய்வதுடன், முறையாக சத்துணவு வழங்கிட தொகை செலவிடப்படாமலிருந்தால் பொது மக்களின் புகாருக்கு உள்ளாகியிருக்க வேண்டும். அவ்வாறான புகார்கள் ஏதும் இல்லை என்பதும் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்களின் (சத்துணவு) அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டு, செலவினம் அனைத்தும் உண்மையில் மாணவர்கள் உட்கொண்டதற்கான செலவினம் (Expenditure incurred for Bonafide purpose of

feeding Nutritious Meal to students under Mid Day Meal Scheme) என்பது அறிக்கைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

vi. தணிக்கைத் தடைகள் எழுப்பப்பட்டு பல ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், தகுந்த ஆவணங்களோ, அதைப்பற்றி அறிந்த பணியாளர்களோ தற்பொழுது பணியில் இல்லாத நிலையைக் கருத்திற்கொண்டு, இதனை சிறப்பினமாகக் கருதி, 1982-1983 முதல் 2014-2015 வரை எழுப்பப்பட்டுள்ள நிலுவையிலுள்ள தடைகளுக்கு விலக்களிக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களின் நேர்முக உதவியாளர்கள் (சத்துணவு) அனைவராலும் வேண்டுகோள் வைக்கப்பட்டுள்ளது.

3. தணிக்கையில் எழுப்பப்பட்டுள்ள ஆட்சேபணை குறித்த தணிக்கைத் தடைகள் மற்றும் செலவினம் தொடர்பான தணிக்கைத் தடைகள் (ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை மற்றும் நீதிமன்ற வழக்கு தொடர்பான பத்திகள் நீங்கலாக) குறித்த விவரங்களைப் பின்வருமாறு சமூக நல ஆணையர் தெரிவித்துள்ளார் :-

| வ. எண். | தணிக்கை பத்திகளின் விவரம் | தணிக்கைத் தடை பத்திகளின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | தொகை பிடித்தம் செய்யவேண்டிய பத்திகளின் எண்ணிக்கை | 53,616 | 257,83,10,289 |
| 2. | தொகை பிடித்தம் செய்யப்பட தேவையில்லா பத்திகளின் எண்ணிக்கை | 25,588 | - |
| | மொத்தம் | 79,204 | 257,83,10,289 |

4. மேலே விவரிக்கப்பட்ட காரணங்களால், 1982-1983 முதல் 2014-2015 வரை எழுப்பப்பட்ட தணிக்கைத் தடைகள், இனி வரும் காலங்களில் தீர்வு செய்ய இயலாத நிலையில் தொடர் நிலுவையிலேயே இருந்து விடும் என்பதால், 1982-1983 முதல் 2014-2015-ஆம் ஆண்டு முடிய எழுப்பப்பட்ட நிலுவையிலுள்ள தணிக்கைத் தடைகளை (ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை மற்றும் நீதிமன்ற வழக்கு தொடர்பான பத்திகள் நீங்கலாக) தள்ளுபடி செய்ய எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று தடையில்லாச் சான்று (No Objection) தலைமைத் தணிக்கை இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கும் சத்துணவு மையங்களில், 1982-1983 முதல் 2014-2015-ஆம் ஆண்டு வரை எழுப்பப்பட்டு நிலுவையிலுள்ள தணிக்கைத் தடைகளுக்கு பூரண விலக்களித்து, தள்ளுபடி செய்து ஆணை வழங்குமாறு சமூக நல ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

5. மேலே பத்தி-2-ல் விவரிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும், நிலுவையில் உள்ள தணிக்கைத் தடைகளைத் தள்ளுபடி செய்திட எவ்வித ஆட்சேபணையும் இல்லை எனத் தலைமைத் தணிக்கை இயக்குநரால் தடையில்லாச் சான்று (No Objection) வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், சமூக நல ஆணையரின்

மாவட்டங்களிலும் இயங்கும் சத்துணவு மையங்களில் 1982–1983 முதல் 2014–2015–ஆம் ஆண்டு வரை எழுப்பப்பட்டு நிலுவையிலுள்ள தணிக்கைத் தடைகளை (ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை மற்றும் நீதிமன்ற வழக்கு தொடர்பான பத்திகள் நீங்கலாக) தள்ளுபடி செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை, நிதித்துறையின் மின் அலுவலக எண்.8605143/கூடுதல் செயலாளர்/நிதி/2024, நாள் 29.01.2025–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை–5.
தலைமைத் தணிக்கை இயக்குநர், சென்னை–35.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
(சமூக நல ஆணையர் வழியாக).

நகல்
மாண்புமிகு அமைச்சர் நிதி மற்றும் சுற்றுச்சூழல் (ம) காலநிலை மாற்றம் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சென்னை–9.
நிதித்துறை (சந), சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10/03/2025

பிரிவு அலுவலர்

10/03/25